



**அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமிரக பள்ளிவாசல்களில் வெள்ளிக்கிழமை ஓதப்படும் ஜும்ஆ உரை**

| | |
|---|---|
| **வெளியிடு** | **ஐக்கிய அரபு அமிரக அரசின்**<br>**இஸ்லாமிய விவகார துறை**<br>(http://www.awqaf.gov.ae) |


வெள்ளிக்கிழமை ஜுமாதியுல் அவ்வல் பிறை 17 ஹிஜ்ரி 1437

Friday of Jumada Al Awwal 17th Hijri 1437

26th February 2016


| | |
|---|---|
| **தலைப்பு:** | **சுற்றுச்சூழலை பராமரித்தல்!** |



| | |
|---|---|
| **தமிழில்** | **மௌலவி, அப்சலுள் உலமா**<br>**புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.**<br>Contact No. +971529919346 & Email : abusalih100@gmail.com<br>w w w . s u n n a t h w a l j a m a t h . c o m |



*இந்த உரையை ஒலி-ஒளி வடிவில் கேட்க +971 52 9919346 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்( ) மெசேஜ் அனுப்பவும். குரூப்பில் சேர விரும்பாதவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.*

| தலைப்பு: | சுற்றுச்சூழலை பராமரித்தல்! |
| --- | --- |

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன்தான் இந்த இயற்கை அமைப்பில் பல அத்தாட்சிகளை வைத்துள்ளான். பரிசுத்த நாயனான அவனை உரிய முறையில் புகழ்கிறேன்.

மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**! இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(4:128)

وَإِنْ تُحْسِنُوا وَتَتَّقُوا فَإِنَّ اللَّهَ كَانَ بِمَا تَعْمَلُونَ خَبِيرًا

“ஆகவே, நீங்கள் (கஞ்சத்தனத்திற்கு உட்படாமல்) ஒவ்வொருவரும் மற்றவருக்கு உபகாரியாயிருந்து (அல்லாஹ்வுக்குப்) பயந்து (நடந்து) கொண்டால் நிச்சயமாக அல்லாஹ் உங்கள் செயலை நன்கறிந்து கொள்வான்”

**முஸ்லிம்களே**! நம்மை சுற்றி உள்ள இந்த இயற்கைகளை நாம் சிந்தித்து பார்த்தால் எண்ணற்ற பல அறிவார்ந்த சிந்தனைகள் பிறக்கும். உயரமான மலைகள் உள்ளன, விவசாய நிலங்களும், மரம் செடி கொடிகளும், பசுமையான காடுகளும், எண்ணற்ற பல உயிரினங்களும் நம் கண்ணெதிரில் இருக்கின்றன. எல்லாம் வல்ல ஏக இறைவன் தனது திருமறையில் கூறுகிறான்: (13:3)

وَهُوَ الَّذِي مَدَّ الْأَرْضَ وَجَعَلَ فِيهَا رَوَاسِيَ وَأَنْهَارًا وَمِنْ كُلِّ الثَّمَرَاتِ جَعَلَ فِيهَا زَوْجَيْنِ اثْنَيْنِ

“அவன்தான் பூமியை விரித்து, அதில் உறுதியான (பெரிய பெரிய) மலைகளையும் (நீண்ட) ஆறுகளையும் அமைத்தான். ஒவ்வொரு கனிவர்க்கத்(தின் மரங்களையும் ஆண் பெண்

கொண்ட ஜ)தை ஜதைகளாக்கினான். இரவைக் கொண்டு பகலை மூடுகிறான். சிந்திக்கக்கூடிய மக்களுக்கு நிச்சயமாக இதில் பல அத்தாட்சிகள் இருக்கின்றன”

இவை அனைத்தும் ஒரே நேர்கோட்டில் மிக சீராக அமைந்துள்ளன. அல்லாஹ் தஆலா கூறுகிறான்: (23:14)

فَتَبَارَكَ اللَّهُ أَحْسَنُ الْخَالِقِينَ

“படைப்பவர்களிலெல்லாம் மிக்க அழகானவனான அந்த அல்லாஹ் மிக பாக்கியம் பொருந்தியவன்”

எல்லாம் வல்ல ஏக இறைவன் எண்ணற்ற பல படைப்புகளை இப்பூமியில் படைத்துள்ளான்: (31:10)

وَبَثَّ فِيهَا مِنْ كُلِّ دَابَّةٍ

“விதவிதமான உயிரினங்களையும் அதில் பரப்பினான்”

ஒவ்வொரு படைப்புகளில் இருந்தும் கிடைக்க வேண்டிய பலன்களும், தேவைகளும், பணிகளும் இருக்கின்றன. இந்த படைப்புகளிடையே உள்ள சுற்றுச்சூழல் சமநிலையைப் பற்றி சங்கை நிறைந்த திருக்குர்ஆன் மிக தெளிவாக கூறுகிறது: (15:19)

وَأَنْبَتْنَا فِيهَا مِنْ كُلِّ شَيْءٍ مَوْزُونٍ

“நாம் பூமியை விரித்து, அதில் அசையாத மலைகளை நட்டினோம். ஒவ்வொரு புற்பூண்டையும் (அதற்குரிய) ஒழுங்கான முறையில் அதில் நாம் முளைப்பித்தோம்”

அதாவது, இறைவன் ஒவ்வொன்றையும் அறிவுப்பூர்வமாக நிர்ணயம் செய்து வைத்திருக்கிறான், தேவையான அளவில் பலனளிக்க கூடிய விதமாக அவற்றை தரப்படுத்தியுள்ளான். எனவே எந்த உயிரினமும் அதன் நியதிக்கு மீறிய அளவில் கூடுதலாகவோ குறைவாகவோ உருவாக்கப் படவில்லை. (136/2 : تفسير النسفي)

இறைவன் தனது திருமறையில் கூறுகிறான்: (27:88)

صُنْعَ اللَّهِ الَّذِي أَتْقَنَ كُلَّ شَيْءٍ إِنَّهُ خَبِيرٌ بِمَا تَفْعَلُونَ

“ஒவ்வொரு பொருளையும் (படைத்து) அதன் இயற்கை அமைப்பின் மீது உறுதிப்படுத்திய அல்லாஹ்வுடைய கட்டளையால் (அவ்வாறு நடைபெறும்). நிச்சயமாக அவன் நீங்கள் செய்து கொண்டிருக்கும் அனைத்தையும் நன்கறிபவனாகவே இருக்கின்றான்”

**அல்லாஹ்வின் நல்லடியார்களே**! மனிதனை சூழ்ந்து இருக்கும் அனைத்தும் சுற்றுச்சூழல் ஆகும். அதாவது வானம் பூமி, விளைநிலங்கள், நீர், போன்றவைகளும், இவற்றால் கிடைக்கும் வளங்கள், இவற்றிற்கு மிக அவசியம் தேவைப்படும் காரணிகள் உள்ளிட்ட அனைத்தும் இந்த சுற்றுச் சூழலில் அடங்கும். அல்லாஹ் நமக்கு தேவையான சுற்றுச் சூழலை உருவாக்கி

கொடுத்துள்ளான். அதில்தான் நாம் வாழ்கிறோம், வணக்கங்கள் புரிகிறோம், நமது உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியமானதாக இருக்கிறது. அதனால்தான் இந்த இயற்கை வளங்களை பல்வேறு வகையில் பாதுகாக்க வேண்டும் என்று நம்முடைய ஷரீஅத் வலியுறுத்திக் கூறுகிறது. இயற்கையை அதன் இயல்பு தன்மைக்கு மாற்றமாக நாம் பயன்படுத்த கூடாது. சுற்றுச்சூழலிற்கு எந்த வகையிலும் நேரடியாகவோ மறைமுகமாகவோ நாம் பாதிப்பு ஏற்படுத்தக் கூடாது. எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (7:56)

وَلاَ تُفْسِدُوا فِي الأَرْضِ بَعْدَ إِصْلاَحِهَا

“(மனிதர்களே! சமாதானமும் அமைதியும் ஏற்பட்டு) நாடு சீர்திருந்திய பின்னர் அதில் விஷமம் செய்து கொண்டலையாதீர்கள்”

மேல்கூறிய வசனத்திற்கு பின்வருமாறு விளக்கம் தருகிறார்கள்: பலன் தரக்கூடிய மரங்களை வெட்டாதீர்கள் என்பது இதன் பொருளாகும். (تفسير القرطبي : (226/7) وهو قول الضحاك)

தேவையில்லாமல் மரங்களை வெட்டுவது, செடி கொடிகளை அப்புறப்படுத்துவது, காரணமேயில்லாமல் விலங்கினங்களை வேட்டையாடுவது, போன்ற அனைத்துமே பூமியில் குழப்பம் செய்வதின் அடையாளமாகும். (فتح الباري لابن حجر : (602/9) وهو من قول الليث بن سعد)

இயற்கையாகவே அமைந்துள்ள இந்த சுற்றுச்சூழலை அதன் நியதிக்கு எதிர்மறையாக மாற்றி அமைப்பது, தேவையற்ற கழிவுகளை உருவாக்குவது, மாசு ஏற்படுத்துவது, மறு சுழற்சிக்கு ஒவ்வாத வகையில் பொருட்களை வீணடிப்பது போன்ற அனைத்தையும் ஏக இறைவன் மிக வன்மையாக கண்டிக்கிறான். எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (7:31)

وَكُلُوا وَاشْرَبُوا وَلاَ تُسْرِفُوا إِنَّهُ لاَ يُحِبُّ الْمُسْرِفِينَ

“(இறைவன் உங்களுக்கு அனுமதித்தவற்றை) நீங்கள் (தாராளமாகப்) புசியுங்கள்; பருகுங்கள். எனினும் (அவற்றில்) அளவு கடந்து (வீண்) செலவு செய்யாதீர்கள். ஏனென்றால், வீண்செலவு செய்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை”

சுற்றுச்சூழலை மிகவும் நியாயமான முறையில் அணுக வேண்டும் என்கிற வழிமுறையை நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கற்றுக் கொடுத்துள்ளார்கள். அவர்களின் அறிவுரையின்படி வீண்விரயம் செய்யக்கூடாது, மிகக் குறிப்பாக தண்ணீரை வீணடிக்க கூடாது. காரணம் உலக வாழ்விற்கு நீர் ஆதாரம் மிகவும் இன்றியமையாததாகும். எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (21:30)

وَجَعَلْنَا مِنَ الْمَاءِ كُلَّ شَيْءٍ حَيٍّ

“நீரைக் கொண்டு (உயிருள்ள) ஒவ்வொன்றையும் வாழ்ந்திருக்கச் செய்தோம்”

பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் கூறுகிறான்: (16:65)



www.sunnathwaljamath.com

وَاللَّهُ أَنْزَلَ مِنَ السَّمَاءِ مَاءً فَأَحْيَا بِهِ الأَرْضَ بَعْدَ مَوْتِهَا إِنَّ فِي ذَلِكَ لآيَةً لِقَوْمٍ يَسْمَعُونَ

“அல்லாஹ்வே மேகத்திலிருந்து மழையை பொழியச் செய்து உயிரிழந்த பூமிக்கு உயிரூட்டுகிறான். (நல்லுபதேசத்திற்கு) செவி சாய்க்கும் மக்களுக்கு நிச்சயமாக இதில் ஓர் அத்தாட்சி இருக்கிறது”

நீர் என்பது இறைவனால் வழங்கப்பட்ட மிகப் பெரிய அருட்கொடையாகும். சமூகத்தில் உள்ள அனைவரும் இந்த நீர் வளத்தை உரிய முறையில் பாதுகாக்க வேண்டும். மறு சுழற்சி செய்யப்பட்ட நீரை சீரான வழியில் பாசனத்திற்கு பயன்படுத்த வேண்டும், வேறு பல பயன்பாட்டிற்கும் இந்த நீரை உபயோகிக்கலாம். உதாரணமாக கட்டிடங்களை சுத்தம் செய்தல், வாகனங்களை கழுவுதல் உள்ளிட்ட நமது அன்றாட பணிகளுக்கு இத்தகைய இரண்டாம் தர தண்ணீரை பயன்படுத்தலாம்.

காரணம் நமது அரசு பெரிய அளவில் பொருட்செலவு செய்து இந்த நீரை நம்மிடம் கொண்டு வந்து சேர்க்கிறார்கள். என்ற போதிலும் அனுதினமும் இந்த நீரை எந்த வித தடங்கலுமின்றி மக்களுக்கு விநியோகம் செய்து வருகிறார்கள். தடையின்றி கிடைத்தாலும் நீர் வளத்தை வீணடிக்க கூடாதென்று நமது ஷரீஅத் சட்டம் வலியுறுத்துகிறது. அது வணக்க வழிபாடுகளுக்காக இருந்தாலும் சரியே. தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கும் நதியில் உள்ள நீரையும் வீணடிக்க கூடாதென்று நாம் அறிவுறுத்தப்பட்டுள்ளோம். காரணம் சுற்றுச்சூழலை பேணி நடக்க வேண்டும் என்கிற அடிப்படையில் இவ்வாறு நாம் நடந்து கொள்ள வேண்டும் என்று இஸ்லாம் அறிவுறுத்துகிறது. இது சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பண்பாகும்.

முஸ்லிம்களே! பசுமை நிறைந்த விவசாயங்களை பெருக்க வேண்டும் என்று நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். விவசாயத்தை மேம்படுத்த உழைப்பவர், அதனை பாதுகாப்பதில் கவனம் செலுத்துபவர், விவசாய வளர்ச்சியில் முழு ஈடுபாடு உள்ளவர் ஆகிய அனைவருக்கும் தர்மம் செய்த நன்மை கிடைக்கும் என்று நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

مَا مِنْ مُسْلِمٍ يَغْرِسُ غَرْسًا، أَوْ يَزْرَعُ زَرْعًا، فَيَأْكُلُ مِنْهُ طَيْرٌ أَوْ إِنْسَانٌ أَوْ بَهِيمَةٌ، إِلاَّ كَانَ لَهُ بِهِ صَدَقَةٌ

“ஒரு முஸ்லிமான மனிதர் ஒரு மரத்தை நட்டுவைத்து, அல்லது விதை விதைத்து விவசாயம் செய்து, அதிலிருந்து ஒரு பறவையோ அல்லது ஏதோ ஒரு மனிதனோ அல்லது ஏதேனும் ஒரு வனவிலங்கோ அல்லது வேறு ஏதேனும் ஒன்றோ உண்டால், அதனால் அவருக்கு ஒரு (தர்மம் செய்ததற்கான) நன்மை கிடைக்காமல் இருப்பதில்லை” (متفق عليه)



www.sunnathwaljamath.com

மேல்கூறிய நபிமொழி இந்த சுற்றுச் சூழலிற்கு மிகப்பெரிய பாதுகாப்பை வழங்குகிறது. இந்த பூமியை சுகாதாரமான முறையில் பராமரிக்க வேண்டும், எந்த வழியிலும் பூமி மாசுபடாதவாறு மிக கவனமாக நமது வளர்ச்சி பணிகளை மேற்கொள்ள வேண்டும். மக்கள் பயன்படுத்தும் பொது பாதைகளில் உள்ள இடையூறுகளை அகற்ற வேண்டும் என்றும் இஸ்லாம் அறிவுறுத்துகிறது. நமது சுற்றுச்சூழல் அழகாகவும், தூய்மையாக இருக்க வேண்டும் என்பது இதன் நோக்கமாகும். இதனை செயல்படுத்துபவர்களுக்கு கண்ணியமான கூலியும், மகத்தான நன்மையையும் கிடைக்கும் என்றும் இஸ்லாம் வாக்களிக்கிறது. இவ்வாறு நடந்து கொள்வது இறை நம்பிக்கையின் ஓர் அடையாளமாகும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

الإِيمَانُ بِضْعٌ وَسَبْعُونَ- أَوْ بِضْعٌ وَسِتُّونَ- شُعْبَةً، فَأَفْضَلُهَا: قَوْلُ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ، وَأَدْنَاهَا إِمَاطَةُ الأَذَى عَنِ الطَّرِيقِ

“இறைநம்பிக்கை என்பது சுமார் எழுபது அல்லது அறுபது கிளைகளை கொண்டதாகும். அவற்றில் மிகவும் ஏற்றமானது “லா இலாஹ இல்லல்லாஹு என்கிற சொல்லாகும். அந்த கிளைகளில் மிகவும் தாழ்வானது பொதுவழியில் உள்ள இடையூறுகளை அகற்றுவதாகும் ( مسلم : 63)

மேலும் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

عُرِضَتْ عَلَيَّ أَعْمَالُ أُمَّتِي حَسَنُهَا وَسَيِّئُهَا، فَوَجَدْتُ فِي مَحَاسِنِ أَعْمَالِهَا إِمَاطَةَ الأَذَى عَنِ الطَّرِيقِ

“என்னுடைய சமூகத்தாரின் செயல்பாடுகள், அதிலுள்ள நல்லவையும் தீயவையும் எனக்கு எடுத்துக் காட்டப்பட்டன. (அவற்றில் உள்ள) அந்த நல்ல செயல்பாடுகளில், பொது வழியில் உள்ள தீங்குகளை அகற்றும் நற்செயலையும் நான் கண்டேன் (553 : مسلم)

பாதையில் கிடைக்கும் கற்கள், குப்பைகள், முட்கள், அருவருப்பான பொருட்கள், பாதுகாப்பற்ற கருவிகள் போன்றவைகள் கிடந்தால் அவற்றை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும்.

இந்த வகையில் மிகவும் வரவேற்கத்தகுந்த, நாகரீகமான பண்பாடு என்னவெனில் பொது இடங்களை எப்போதும் தூய்மையாக வைத்திருப்பதாகும். தெருக்கள், சாலைகள், தோட்டங்கள், பூங்காக்கள், கடற்கரை பகுதிகள், நடைபாதைகள், வெட்ட வெளி மைதானங்கள் போன்ற அனைத்து இடங்களையும் நாம் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். கண்டிப்பாக கழிவுகளையும், உணவு பொருட்களையும் பொறுப்பில்லாமல் கண்ட இடங்களில் வீசக்கூடாது. பொது பயன்பாட்டிற்கு உள்ள இடங்கள் தூய்மையாக இருந்தால்தான் நம்மால் அவற்றை சுகமாக அனுபவிக்க முடியும், மற்றவர்களும் முகம் சுழிக்காமல் பயன்படுத்த முடியும்.

நாம் நடமாடும் பூமி உயிர்ப்போடு இருந்தால்தான் அந்த பூமி நமக்கு தேவையான விளைச்சல்களை தரும். இன்றைய காலங்களில் நாம் அதிக அளவில் மண்ணின் இயற்கைத் தன்மையை வெகுவாக குறைத்துவிட்டோம். என்ற போதிலும் மண்ணின் இயல்பு தன்மை இதற்கு மேலும் கெடாமல் இருப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் கவனமாக செயல்பட வேண்டும். எனவே யாரும் பிளாஸ்டிக் குப்பைகள், மக்காத பொருட்கள், மின் சாதனங்கள், பயனற்று போன உதிரிபாகங்கள், போன்றவற்றை கண்ட இடங்களில் வீச வேண்டாம். இப்படி செய்வதால் அந்த கழிவுகளை மற்ற உயிரினங்கள் உட்கொண்டு பாதிக்கப்படுகிறது. சில வேளைகளில் அவை மரணித்தும் விடுகின்றன.

எனவே இதற்கு சரியான தீர்வு குப்பைகளை தரம் பிரித்து, அதற்குரிய குப்பைத் தொட்டிகளில் போட வேண்டும். சிறிதளவு அக்கறை செலுத்தி சிரமம் பார்க்காமல் தொடர்ந்து இப்படி நாம் செய்துவந்தால் நம்முடைய அடுத்த தலைமுறைக்கு இந்த பூமியை முன்னெடுத்துச் செல்ல முடியும். இதில் விந்தை என்னவென்றால் முந்தைய காலங்களில் படித்தவர்கள் மிக குறைவு ஆனால் அவர்கள் இயற்கையை போற்றி பாதுகாத்தார்கள். இன்றைய காலங்களில் படிப்பறிவு பெற்றவர்கள் அதிகம், ஆனால் இயற்கையை பாதுகாக்கும் எண்ணமே இல்லாமல் இருக்கிறார்கள். இந்த சுற்றுச்சூழலை நாம் அதிக அக்கறை செலுத்தி பாதுகாத்து வந்தால்தான், தன்னுடைய பங்களிப்பை இயற்கை மிகச் சரியாக செய்து கொடுக்கும். இதன் மூலம் இறைவனிடமும் நாம் வெகுமதிகளை பெற முடியும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

كَانَ عَلَى الطَّرِيقِ غُصْنُ شَجَرَةٍ يُؤْذِي النَّاسَ فَأَمَاطَهَا رَجُلٌ، فَأُدْخِلَ الْجَنَّةَ

"ஒரு பாதையில் மரக்கிளை ஒன்று கிடந்தது, (அவ்வழியே சென்று வரும்) மக்களுக்கு அது பெரும் அவதியாக இருந்தது. அப்போது ஒரு மனிதர் அதனை அங்கிருந்து அப்புறப்படுத்தி விடுகிறார். இதன் காரணமாக நாளை மறுமையில் கண்டிப்பாக அவர் சுவனத்திற்குள் அனுப்பப்படுவார்" (3682 : ابن ماجه)

தொழுகையாளிகளே! எல்லாம் வல்ல அல்லாஹ் எண்ணற்ற பல கிருபைகளை நமக்கு வழங்கியுள்ளான். பலன் தரக்கூடிய வகையில் பல மிருகங்களையும் கால்நடைகளையும் தந்துள்ளான்: (16:5)

وَالأَنْعَامَ خَلَقَهَا لَكُمْ فِيهَا دِفْءٌ وَمَنَافِعُ وَمِنْهَا تَأْكُلُونَ

"(மனிதர்களே!) கால்நடைகளையும் உங்களுக்காக அவனே படைத்திருக்கிறான். அவற்றில் (குளிரைத் தடுக்கும்) பொருள்களும் பல பயன்களும் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றைப் புசிக்கிறீர்கள்"

இவற்றினால் கிடைக்கும் பலன்கள்: அந்த கால்நடைகளின் குட்டிகள், அதன் பால், அதன் மாமிசங்கள் போன்றவைகளாகும். (169/17 تفسير القرطبي)

பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் கூறுகிறான்: (16:80)



www.sunnathwaljamath.com

وَجَعَلَ لَكُم مِنْ جُلُودِ الأَنْعَامِ بُيُوتًا تَسْتَخِفُّونَهَا يَوْمَ ظَعْنِكُمْ وَيَوْمَ إِقَامَتِكُمْ وَمِنْ أَصْوَافِهَا وَأَوْبَارِهَا وَأَشْعَارِهَا أَثَاثًا وَمَتَاعًا إِلَى حِينٍ

“உங்கள் வீடுகளை அல்லாஹ் உங்களுக்கு நிம்மதி தருவதாக அமைத்தான். கால்நடைகளின் தோல்களை நீங்கள் வீடுகளாக அமைக்க (வசதியான விதத்தில்) உங்களுக்காக அவன் படைத்தி ருக்கிறான். அது நீங்கள் பிரயாணம் போகும் சமயத்திலும், ஓர் இடத்தில் தங்கும் சமயத்திலும் எளிதில் சுமந்து செல்லக்கூடியதாக இருக்கிறது. (ஆடை போன்ற) பற்பல பொருள்களையும் தயாரிப்பதற்கு அவற்றில் (செம்மறியாட்டின்) கம்பளி, (ஒட்டகத்தின்) உரோமம் (வெள்ளாட்டின்) முடி ஆகியவைகளையும் (அவன் உங்களுக்காக படைத்திருக்கிறான். அவற்றாலான பொருள்கள்) ஒரு காலம் வரையில் உங்களுக்கு பயன்படுகின்றன”

இதன் காரணமாகவே நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த கால்நடைகளை நன்கு பராமரித்து வரச் சொல்லியிருக்கிறார்கள். அளவிற்கு அதிகமாக பாரம் ஏற்றுவது, போதிய அளவில் தீவனம் போடாமல் இருப்பது, கட்டளைக்கு கீழ்படிவதற்காக கொடுமைப் படுத்துவது உள்ளிட்ட எந்த வகையிலும் அவற்றை நாம் துன்புறுத்தக் கூடாதென்று வலியுறுத்தியுள்ளார்கள்.

உலகின் அருட்கொடை அண்ணல் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒருமுறை ஓர் ஒட்டகத்தை கடந்து சென்றார்கள். அந்த ஒட்டகம் தாகத்தாலும், பசியாலும் மிகவும் மெலிந்து இருந்தது. உடனே கண்மணி நாயகம் கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்:

اتَّقُوا اللَّهَ فِي هَذِهِ الْبَهَائِمِ الْمُعْجَمَةِ

"இந்த வாயில்லா கால்நடைகள் குறித்து நீ அல்லாஹ்வை அஞ்சிக் கொள்" என்று அந்த ஒட்டக உரிமையாளரை பார்த்து கடுமையாக எச்சரித்துவிட்டுச் சென்றார்கள். (2548 : أبو داود)

அதேசமயம் அந்த கால்நடைகளை நன்கு பராமரித்து, அக்கறையோடு அவற்றை பேணி பாதுகாப்பவர்களுக்கு நன்மைகள் கிடைக்கும் என்றும் கூறியுள்ளார்கள்.

"நாங்கள் இந்த கால்நடைகளை நன்கு பராமரித்து வருகிறோம். “இதற்கும் எங்களுக்கு (அல்லாஹ்விடம்) கூலி கிடைக்குமா?" என்று ஒருமுறை சில சஹாபாக்கள் கேட்டார்கள். அதற்கு உலகின் அருட்கொடை கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்:

فِي كُلِّ كَبِدٍ رَطْبَةٍ أَجْرٌ

"(ஆம்;) உயிர் பிராணிகள் ஒவ்வொன்றின் விஷயத்திலும் (அதற்கு உதவி செய்யும்பட்சத்தில் மறுமையில்) அதற்கான நற்பலன் கிடைக்கும்" என்று சொன்னார்கள்.(2244 : مسلم )

அதாவது, உயிரோடு இருக்கும் விலங்குகளுக்கு தண்ணீர் கொடுப்பது, உணவளிப்பது, ஆபத்துகளில் இருந்து பாதுகாப்பது என்று அக்கறையோடு கவனித்துவந்தால் அதற்குரிய நன்மைகள் கிடைக்கும்.

சுற்றுச்சூழலில் மிக முக்கிய பங்கு வகிக்கும் காற்றையும் நாம் மாசுபடுத்தாமல் இருக்க வேண்டும். புகை பிடிப்பதால் வரும் புகை, வாகனங்களில் இருந்து வரும் புகை, பிளாஸ்டிக் பொருட்களை எரிப்பதால் வரும் புகை, ஆலைகளில் வரும் புகை என பல்வேறு வகையில் இந்த காற்று மாசுபடுகிறது. சுத்தமான காற்றை சுவாசிப்பதற்கான உரிமை அனைத்து மக்களுக்கும் இருக்கிறது. எனவே நாம் மற்றவர்களின் உரிமையை பறிக்கக் கூடாது, நமது செயல்பாடுகளால் மற்றவர்களுடைய உடல் நலம் பாதிப்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

யா அல்லாஹ்! நாங்கள் வாழும் இந்த உலகை செம்மையாக்கி வைப்பாயாக!! நாங்கள் இறுதியாக ஒதுங்க இருக்கும் மறுமை நாளையும் எங்களுக்காக நீ அழகுபடுத்தி வைப்பாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**: இறைவனுக்கு அஞ்சி நடக்க வேண்டும், நபிகள் நாயகம் ரஸுலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறைகளை பின்பற்றி வாழ வேண்டும் என்பதே நாம் ஒருவருக்கொருவர் செய்யும் அறிவுரையாக இருக்கிறது.

**தொழுகையாளிகளே**! சுற்றுச்சூழலிற்கு நாம் உதவியாக இருக்க வேண்டும். நம்மை சுற்றி இருக்கும் பகுதிகளை மிகவும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். அவற்றை தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும். காரணம் இந்த சுற்றுச்சூழலை பாதுகாப்பது நமது கடமையாகும். எனவே அக்கறையோடு அதனை கண்காணிக்க வேண்டும்.

நமது ஐக்கிய அரபு அமீரக அரசு தமது இயற்கை வளங்களை பாதுகாப்பதற்காக பல்வேறு வியூகங்களை வகுத்துள்ளது. அவற்றை தமது சொத்துகளாக கருதுகிறது. தன்னுடைய குடிமக்களின் அடுத்த தலைமுறையினரின் உரிமைகளை பாதுகாப்பதற்காக இவற்றை செய்து வருகிறது. இயற்கை வளங்களை கூட்டுகிறது, அதிகமான மரங்களை நடுகிறது, வேட்டையாடுவதற்கு ஒழுங்குமுறைகளை வகுத்துள்ளது, சாலைகளை மிகச் சிறப்பாக கட்டமைத்து தூய்மையாக வைத்திருக்கிறது, பல பூங்காக்களை உருவாக்கியுள்ளது, எண்ணற்ற பல துப்பரவு பணியாளர்களை நியமித்துள்ளது, இதன் மூலம் சுற்றுச்சூழலை மிக சிறப்பாக இந்த அரசு பேணுகிறது.

உலக அளவில் வளர்ச்சி பெற்ற மிக அழகிய தேசமாக இந்த நாடு திகழ்கிறது, அதேசமயம் மிகவும் குறைவான அளவிலேயே மாசடைந்த பகுதியாகவும் இருக்கிறது. தொடர்ந்து இந்த தேசம் தனது தூய்மையை கடைப்பிடித்து வருகிறது. இவற்றை பாதுகாப்பதற்கு நாமும் ஒத்துழைக்க வேண்டும். சுற்றுச்சூழலின் அவசியத்தை முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டும், பிறகு நம்முடைய பிள்ளைகளுக்கும் அவற்றைக் கற்றுக் கொடுக்க வேண்டும். எனவே நம்முடைய பிள்ளைகள் கட்டிடங்களை தூய்மையாக வைத்திருக்க வேண்டும், சுவர்களில் கிறுக்க கூடாது, பூங்காக்களில் குப்பைகளை கொட்டக்கூடாது, கடற்கரை பகுதிகளில் பாலித்தீன் பைகளை வீசக் கூடாது, பொது மக்கள் பயன்படுத்தும் பாதைகளில்

உணவு கழிவுகளையும், குப்பைகளையும் போடக் கூடாது. கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

كُلُّكُمْ رَاعٍ، وَكُلُّكُمْ مَسْئُولٌ عَنْ رَعِيَّتِهِ

“உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளியே. நீங்கள் ஒவ்வொருவரும் (அவரவர் பொறுப்பு குறித்து மறுமையில்) விசாரிக்கப்படுவீர்கள்”(متفق عليه)

யாருக்கெல்லாம் இந்த சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டும் என்கிற அக்கறை மிக உண்மையாக இருக்கிறதோ அவர்கள் தங்களுடைய வழிகளில் ஆக்கப்பூர்வமான வகையில் அதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம். ஒவ்வொரு தனிமனிதனின் உழைப்பும் சமூகத்திற்கு மிகவும் அவசியமாகும்.

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹீ வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُوْلِي الأَمْرِ مِنكُم

“ஈமான்கொண்ட நல்லடியார்களே ! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்”

யார் மீது ஸலவாத் சொல்ல வேண்டும் என்று நமக்கு கட்டளை இடப்படிருக்கிறதோ அவர்கள் மீது நம் அனைவரும் ஸலவாத் ஓதிக் கொண்டே இருப்போம்:

مَنْ صَلَّى عَلَيَّ صَلاَةً صَلَّى اللَّهُ عَلَيْهِ بِهَا عَشْراً

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: "யார் என் மீது ஒரு முறை ஸலவாத் சொல்லுகிறார்களோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத் சொல்லுகிறான்" (முஸ்லிம் : 384 )

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹுஅலைஹீ வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும் ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!, மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக.!!!
யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக,

கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்ககூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!! சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும், தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள் தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!!

யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும், விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்!

யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக! எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக, எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக, நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும் அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக!

யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக!

துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

மகத்தான அல்லாஹ்வை நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவு கூறுகிறான், மேலும் அவன் நமக்கு செய்த நிஃமத்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவன் அதனை உங்களுக்கு மேலும் அதிகப்படுத்துவான். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகமிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவைகளுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்).